செ.வெ.எண்: 06 நாள்: 02.12.2016

**அறந்தாங்கியில் நடைபெற்ற அம்மா திட்ட முகாமில் பயனாளிகளுக்கு ரூ.32,85,500 மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி நகராட்சி, டி.என்.எஸ் திருமண மண்டபத்தில் அறந்தாங்கி வட்டாட்சியர் அலுவலகம் சார்பில் அம்மா திட்ட முகாம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், அறந்தாங்கி சட்டமன்ற உறுப்பினர் திரு.இ.ஏ.ரெத்தினசபாபதி அவர்கள் முன்னிலையில் இன்று (02.12.2016) நடைபெற்றது.

இந்த அம்மா திட்ட முகாமை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் துவக்கி வைத்து பொதுமக்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வருவாய்த்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். இதன்படி தமிழகஅரசு வருவாய்த்துறையின் மூலம் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் வருவாய் வட்டத்திற்கு உட்பட்ட பகுதிகளுக்கு அலுவலர்கள் நேரடியாக சென்று பொதுமக்களிடம் மனுக்களை பெற்று தீர்வு காணும் வகையில் அம்மா திட்ட முகாம் நடத்த உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் அறந்தாங்கி வட்டத்திற்குட்பட்ட அறந்தாங்கி நகராட்சியில் அம்மா திட்ட முகாம் நடத்தப்பட்டு பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு தீர்வு காணப்பட்டது.

மேலும் இம்முகாமில் 8 பயனாளிகளுக்கு ரூ.133500 மதிப்பில் வீட்டுமனைப்பட்டாக்களுக்கான ஆணைகளும், 14 பயனாளிகளுக்கு ரூ.1350000 மதிப்பில் இறப்பு நிவாரண உதவித்தொகைக்கான காசோலைகளும், 18 பயனாளிகளுக்கு ரூ.860000 மதிப்பில் விபத்து கொடுங்காய நிவாரண உதவித்தொகைக்கான காசோலைகளும், 9 பயனாளிகளுக்கு ரூ.150000 மதிப்பில் நலிந்தோர் நலத்திட்ட நிதி உதவித்தொகைக்கான காசோலைகளும், 66 பயனாளிகளுக்கு ரூ.792000 மதிப்பில் முதியோர் உதவித்தொகைக்கான காசோலைகளும், 102 பயனாளிகளுக்கு புதிய குடும்ப அட்டைகளும், 11 பயனாளிகளுக்கு பட்டா மாறுதல் ஆணைகளும் என மொத்தம் 228 பயனாளிகளுக்கு ரூ.3285500 மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

தமிழகஅரசு ஏழை, எளிய பொதுமக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும் வகையில் தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டம், விலையில்லா வெள்ளாடுகள் மற்றும் கறவை மாடுகள் வழங்கும் திட்டம், அம்மா உணவகம், அம்மா குடிநீர், அம்மா உப்பு போன்ற பல்வேறு நலத்திட்ட உதவிகளை செயல்படுத்தி வருகிறது. நமது மாவட்டத்தில் உள்ள 41000க்கும் மேற்பட்டோர் முதியோர் உதவித்தொகையாக மாதம் ரூ.1000 பெற்று வருகின்றனர். மாவட்டம் முழுவதிலும் உள்ள பொதுமக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் காவிரி கூட்டு குடிநீர்த்திட்டம் ரூ.610 கோடி மதிப்பீட்டில் அறிவிக்கப்பட்டு தற்பொழுது குடிநீர் சோதனை ஓட்டப்பணிகள் நடைபெற்று வருவதுடன் விரைவில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படவுள்ளது. எனவே தமிழகஅரசு வழங்கும் இத்தகைய நலத்திட்ட உதவிகளை பெறும் பயனாளிகள் இதனை உரிய முறையில் பெற்று பயன்பெற வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இம்முகாமில் அறந்தாங்கி வருவாய் கோட்டாட்சியர் திருமதி.இரம்யாதேவி, மாவட்ட வழங்கல் அலுவலர் திருமதி.பஞ்சவர்ணம், வட்டாட்சியர்கள் திருமதி.பரணி, திரு.ஜெயசித்திரகலா (வ.வ.அ), நகராட்சி ஆணையர் திரு.நாவேந்திரன், நகர கூட்டுறவு வங்கித்தலைவர் திரு.சிவசண்முகம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.அரசன், முன்னாள் ஒன்றியக்குழு உறுப்பினர் திரு.செல்லக்கண்ணு மற்றும் வருவாய்த்துறை உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**